தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1980 ஜூலை 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.''

நல்ல முயற்சியுடனும் நிறைந்த அறிவுடனும் இடையறாது பணியாற்றி வந்தால் நாட்டில் குடிமக்கள் உயர்வடைவார்கள்.

I. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மத்திய வேளாண்மை பண்ணை, செங்கம்.

* வினா எண் 41. திரு த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) வட ஆற்காடு மாவட்டம் செங்கத்தில் உள்ள மத்திய வேளாண்மை பண்ணை தற்போது எந்தவித பயிர் சாகுபடி பணிகளிலும் ஈடுபடாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு அதனை எடுத்து நல்லமுறையில் பயிர் சாகுபடி செய்ய நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து.—(அ) இப்பண்ணை மத்திய அரசின்கீழ் இருப்பதால் இது சம்பந்தமாக இந்த அரசிடம் தகவல் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. வேணுகோபால்: தலைவரவர்களே, இந்தப் பண்ணை மத்திய அரசின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பதால் தகவல் இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கு பல ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் சாகுபடிக்கு சமன் செய்யப்பட்டு, தற்போது அவை எந்தவிதமான பயனும் இல்லாமல் இருப்பதால் நம்முடைய மாநில அரசு அதை எடுத்து வேளாண்மை சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அங்கே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எல்லாம் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. நிறைய கிணறுகள் எடுத்திருக்கிறார்கள் அங்கே. ஏராளமான ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். மத்திய அரசு அந்தப் பண்ணையை செயல்படுத்தவில்லை என்றால் மத்திய அரசுக்கு எழுதி, அதை மாநில அரசு தன்னுடைய பொறுப்பில் எடுத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றாலும் மத்திய அரசு கட்டாயமாகச் செயல்படுத்தவேண்டுமென வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது பற்றி தகவல் அறிந்து ஆவன செய்யப்படும்.

ஆற்காடு தொகுதியில் சாலைகள்.

*வினா எண் 42. திரு ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு தொகுதியில் ஆற்காடு-ஆரணி, ஆற்காடு—செய்யாறு, புதுப்பாடி—இலுப்பை ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இச்சாலைகளை மேம்பாடு செய்யும்பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, இந்தப் பாதை கடந்த 7, 8 ஆண்டுகளாக சரிவர இல்லாமல் பஸ்போக்குவரத்துக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றது. இதற்காக, வந்தவாசி—ஆரணி சாலையை பழுது பார்ப்பதற்காக, 1,23.000 ரூபாயும், ஆற்காடு-திண்டிவனம் சாலையை பழுது பார்ப்பதற்காக 2,13,500 ரூபாயும் இலுப்பை சாலையைப் பழுதுபார்ப்பதற்காக 3,20,000 ரூபாயும் மதிப்பீடு செய்யப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது.